1979 நவம்பர் 7]

அப்படிச் செய்தால்தான் சென்னை மாநகர் உருப்படியாக இருக்கும். இல்லை என்று சொன்னால் இதைச் சீர்திருத்த முடியாது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. திருப்பிக் கொடுப்பது என் கையிலா இருக்கிறது ?

குனியமுத்தூர் கிராமத்தில் பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி.

***வினா எண் 131—திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குனியமுத்தூர் கிராமத்திலுள்ள பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதி கோரி விண்ணப்பித்துள்ளார்களா ?

(ஆ) பீடித் தொழிலாளர்கள் சேமநல நிதியில் என்னென்ன நலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) குனியமுத்தூர் கிராமத்திலுள்ள பீடித் தொழிலாளர்களிடம் இருந்து வீட்டு வசதி கோரி விண்ணப்பம் ஏதும் அரசுக்குக் கிடைக்கப் பெறவில்லை.

(ஆ) பீடித் தொழிலாளர்கள் நல நிதியில் பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதி அளித்தல், வீட்டு வசதி, மனமகிழ் மன்றங்கள் அமைத்தல், கல்விச் சலுகைகள் அளித்தல் ஆகிய நலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மருத்துவ வசதியைப் பொறுத்த மட்டில் முதற்கட்டமாக மேலப்பாளையத்தில் பீடித் தொழிலாளர்களுக்கென்று ஒரு நடமாடும் மருத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டப்பட இருக்கிறது. மேலும் திருச்சி அல்லது வேலூரில் ஒரு மருந்தகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. கோவை மாவட்டம், பெருந்துறையில் ராமலிங்கம் காசநோய் நிலையத்தில் பீடித் தொழிலாளர்களுக்கென்று தனியே 10 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏனைய வசதிகளான வீட்டு வசதி, மனமகிழ் மன்றங்கள் அமைத்தல், கல்விச் சலுகைகள் ஆகியவற்றை அமுல்படுத்த பெங்களூரில் உள்ள சேம நல ஆணையாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, குனியமுத்தூர் பகுதியிலுள்ள பீடித் தொழிலாளர்கள் ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு முன்பு மாவட்ட ஆட்சி தலைவருக்கு மனுக்கள் அனுப்பியுள்ளார்கள். எனக்கும் அதை அனுப்பியுள்ளார்கள். குறுச்சியில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப் படுகின்ற விடுகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுள் ளார்கள். அவர்களுக்கு அவைகள் ஒதுக்கப்படுமா? மேலும் குனியமுத்தூர், ஆற்றுப்பாலம் குறிச்சி ஆகிய பகுதிகளில் ஏராளமான பீடித் தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதிகளிலும் அமைச்சர் அவர்கள் படித்த நலப் பணிகள் ஏதேனும் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒன்றிரண்டு மாத காலமாக நானும் திரு. நடராசன் போன்றவர்களும் நெருங்கிப் பழகி வருகிறோம். எனவே அந்த மனுவை என்னிடத்தில் கொடுத் திருந்தால் நான் பரிசிலனை செய்திருப்பேன். பரவாயில்லை, இப்போதாவது அந்த மனுவை என்னிடத்தில் கொடுத்துவிடுங்கள். நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்லி என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குனியமுத்தூர் கிராமத்திலுள்ள பிடித் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட கேள்வி. தொழிலாளர்களின் தலைவர்கள் 4 பேர்கள் கை தூக்குகிறார்கள். நான் ஒருவருக்குத்தான் அனுமதி கொடுக்க முடியும். திரு. ரமணி அவர்கள் கேட்கட்டும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த குனியமுத்தூர் கிராமம் கோவை மாநகரத்தின் எல்லையில் இருக்கும்படியாக இருப்பதால், அங்கே அதிகமான தாழ்த்தப்பட்ட இன மக்கள், பீடித் தொழிலாளர்கள், தோல் பதனிடும் தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா? நல்ல திட்டங்களையும், அந்த பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு மனை வாங்கி விடு கட்டி கொடுக்கும் திட்டத் தையும் அரசு எடுத்து பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

1979 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கீழ்க்கண்ட நல்ல பணிகளைச் செய்துதர மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது :

(1) பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் மருத்துவ வசதி அளித்தல்.

(2) வீட்டு வசதி செய்து கொடுத்தல்.

(3) மனமகிழ் மன்றங்கள் அமைத்துக் கொடுத்தல்.

(4) கல்வி வசதிகளை செய்து கொடுத்தல்.

இவை நான்கும் இருக்கின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் இவைகள் சம்பந்தமாக தங்களுக்கு வரக்கூடிய மனுக்களை என்னிடத்தில் கொண்டு வந்து கொடுக்கும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏதோ என்னுடைய வயதிற்கு தக்க, என்னாலான பணிகளை மேற்கொண்டு செய்து முடித்து தருகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கோத்தகிரியில் புதிய பேருந்து நிலையம்.

* **வினா எண் 132—திரு. போ. கோபாலன் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோத்தகிரியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) ஆம்.

(ஆ) கோத்தகிரியில் அமைக்கப்படவிருக்கும் பேருந்து நிலையத்திற்கான நிலம் வாங்கும் ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நிலம் வாங்கியபின் தான் ஏனைய விவரங்கள் தீர்மானிக்கப்படும்.

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, கோத்தகிரியில் தனியார்களுக்குச் சொந்தமான கட்டிடத்தில் பேருந்து நிலையம் வைத்திருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்திலிருந்து தனியாக வைப்பதற்கு அதிகாரிகள் வேண்டுமென்றே கால தாமதம் செய்கிறார்கள் என்றுகூடப் புகார்கள் வருகின்றன. இதற்கு விரைவில் தீர்வு காண உடனடியாக அங்கே பேருந்து நிலையத்தை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன் ?